
# எத்தனை கைகள் பெண்களுக்கு



தமிழ்நாட்டில்
ஒருங்கிணைக்கப்படாத
தொழிற்பிரிவுகளில் உழைக்கும்
மகளிர் குழந்தை பராமரிப்புக்கு
கையாளும் வழிமுறைகள்

நவம்பர், 1996

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்
3வது குறுக்குத்தெரு
தரமணி வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

Telephone: 044-2351229, 2351698

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட
**'Balancing Multiple Roles'**
என்ற ஆய்வறிக்கையின் சுருக்கப்பட்ட தமிழாக்கமே இது.

தொகுப்பு: ஏ.எஸ். பத்மாவதி
தமிழ்மொழியாக்கம்: எஸ். ரவீந்திரன்
அட்டைப்படம்: ஜெயஸ்ரீ வெங்கடேசன்

அச்சிட்டோர்:
AIM Visual Communications, Chennai.

# எத்தனை கைகள் பெண்களுக்கு...

*தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் வேலை பார்க்கும் உழைக்கும் மகளிர் குழந்தைப் பராமரிப்பிற்காகக் கையாளும் வழிமுறைகள்*

எம்.ஆர். அருள்ராஜ்
எஸ். ராஜா சாமுவேல்
*சமூகப்பணித்துறை,*
*லயோலா கல்லூரி, சென்னை.*

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

# யார் பொறுப்பு...

குழந்தைகளின் பராமரிப்புக்கு யார் பொறுப்பு? தாயா, தந்தையா, பெற்றோரா, சமூகமா? இந்தச் சாதாரண கேள்வி இன்று அர்த்தம் பொதிந்த மிக முக்கியமான கேள்வியாகி விட்டது. காரணம் வெளி வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. ஒரே சமயத்தில் பணியாளர்களாகவும், தாய்மார்களாகவும் பாத்திரமேற்க வேண்டிய இக்கட்டான சூழலைச் சமாளித்தாக வேண்டிய கட்டாயத்திற்கு பெண்கள் தள்ளப்பட்டு விட்டார்கள்.

இன்று பெண்கள் பெரும் எண்ணிக்கையில் வெளி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனினும் தொழிலாளர் நலச் சட்டங்கள் இதைக் கருத்தில் கொள்ளாமல் ஆண் சம்பாதிப்பவன், பெண் வீட்டைப் பராமரித்து, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவள் என்ற மரபான குடும்பம் பற்றிய கருத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. ஆனால், நடைமுறையில் ஆணும், பெண்ணும் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள் அநேகம். பெண்ணே பிரதானமாக சம்பாதிப்பவளாக உள்ள குடும்பங்களும் இருக்கின்றன. ஆணும் பெண்ணும் பணியாற்றுகிற போதிலும் பெண்ணின் வருமானமே பெரிதும் குடும்பத்தை நடத்த உதவுகிற குடும்பங்களும் இருக்கின்றன. கணவனின் வருமானம் மிகக் குறைவாகவே இருப்பதும், குடி போன்ற வழிகளில் அது செலவாகி விடுவதும் இதற்குக் காரணம். இத்தகைய சூழ்நிலையில் தாய், பணியாளர், குடும்பத்தைப் பேணுபவள் என ஒன்றோடு ஒன்று முரண்படக்கூடிய மூன்று பாத்திரங்களை சமாளிப்பது அவளுக்கு மிகவும் கடினமாகி விடுகிறது.

## பெண்களின் மும்மடங்கு பொறுப்புகள்

ஒரு பெண் பணியாளராகவும், தாயாகவும், குடும்பத்தைப் பேணுபவளாகவும் இருக்க வேண்டிய சூழலில் அவளுடைய தேவைகளும் பொறுப்புகளும் சிக்கலானதாக இருப்பதை தொழிலாளர் சட்டங்கள் கணக்கில் கொள்ளாதிருக்கிறது. வீட்டுக்கு வெளியே குழந்தை பராமரிப்பு வசதி ஏற்படுத்துவது பற்றிப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. இருக்கக் கூடிய சட்டங்களும் அனைத்து உழைக்கும் மகளிர்க்கும் விரிவுபடுத்தப்படாமல், உழைக்கும் மகளிரில் 11ரூ இருக்கக்கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற் பிரிவுகளில் உள்ள உழைக்கும் மகளிர்க்கு மட்டுமே பலன் அளிப்பதாக உள்ளது. சட்டத்தின் கணிப்பில் வராத ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் பணியாற்றும் 89ரூ மகளிரின் பிரச்சனைகள் பல் மடங்கு சிக்கலானது.

ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் வேலை பார்க்கும் பெண்கள் ஒரே சமயத்தில் தாய், தொழிலாளி, வீட்டை பேணுபவள் என்ற மூன்று பாத்திரங்களையும் தடுமாறாமல் சமாளித்தாக வேண்டியிருக்கிறது.

*தாய், பணியாளர், குடும்பத்தைப் பேணுபவள் என ஒன்றோடு ஒன்று முரண்படக்கூடிய மூன்று பாத்திரங்களை சமாளிப்பது அவளுக்கு மிகவும் கடினமாகி விடுகிறது.*

இதனால் எந்த ஒன்றிலும் அவர்களால் முழுமையான கவனத்தைச் செலுத்த முடியாமல் போய் விடுகிறது. உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக அமைந்துவிட்ட பொருளீட்டும் வேலையில் சமரசம் செய்ய முடியாது. வீட்டைப் பராமரிக்க வேண்டிய வேலையையும் ஒரு பெண் விட்டுவிட முடியாது. ஆக மொத்தத்தில் தாய் என்ற பங்குதான் தடுமாறிப் போகிறது.

குழந்தை பிறந்ததிலிருந்தே வேலை நிமித்தமாகத் தாய் குழந்தையிடமிருந்து ஒரு நாளின் பெரும்பகுதி பிரிந்திருக்க வேண்டியிருக்கிறது. குழந்தைகள் நோய்வாய்ப்படும் போதுகூட வருமானத்தை இழந்தே தாய்மார்கள் விடுப்பு எடுக்க வேண்டியதாகிறது.

## பதிலுரைக்கப்படாத கேள்விகள்

ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் வேலை பார்க்கும் பெண் தொழிலாளிகள், குழந்தைப் பராமரிப்பில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், குழந்தைப் பராமரிப்பு தொடர்பான அவர்களின் தேவைகளும் போன்ற பல கேள்விகள் பதிலுரைக்கப்படாமல் இருக்கின்றன.

தாய் வேலைக்குப் போகும் போது சிறு குழந்தையை யார் கவனித்துக் கொள்கிறார்கள்? குழந்தைப் பராமரிப்பு தொடர்பாக, தாய் தொழில் ரீதியாக எதிர்கொள்ளும் சிக்கல்கள் யாவை? தாய்ப்பால் ஊட்டுவதை தொழில் எவ்விதத்தில் பாதிக்கிறது? குழந்தைப் பராமரிப்பில் மூத்த குழந்தைகளின் பங்களிப்பு என்ன? அது அவர்களிடம் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது? உழைக்கும் தாய்மார்கள் பயன்படுத்தும் குழந்தைப் பராமரிப்பு சேவை என்ன? இத்தகைய சேவை பற்றி என்ன அபிப்ராயப் படுகிறார்கள்? குழந்தையைப் பேணும், குடும்பத்திலுள்ள பிற அங்கத்தினர்கள் பற்றி தாயின் அபிப்ராயம் என்ன? அவர்களுடைய தொழில் சூழலுக்கு ஏற்ப குழந்தைப் பராமரிப்பில் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகள் யாவை?

1978ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேசிய மாதிரி ஆய்வு, பெண் தொழிலாளிகள் கையாளும் குழந்தைப் பராமரிப்பு முறைகளைப் பற்றி விரிவாக முன் வைத்தது. இதுதவிர, மேற்கண்ட கேள்விகள் குறித்து வேறெந்த ஆய்வும் இது நாள் வரை மேற்கொள்ளப்படவில்லை. பெரும்பாலான உழைக்கும் மகளிர், அவர்தம் குழந்தைகளின் நலன் மற்றும் வளர்ச்சி தொடர்பான அடிப்படைக் கேள்விகளை முன்வைக்கும் இத்தகைய கருத்துக்கள் பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டியிருக்கிறது. ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் பணிபுரியும் பெண்களின் குழந்தைப் பராமரிப்பு தேவை பற்றியும் அவர்கள் மேற்கொள்ளும் குழந்தை பராமரிப்பு முறைகள் பற்றியுமான உண்மையான நிலையை விளக்கும் தகவல்களை இந்த ஆய்வு முன்வைக்க முயற்சிக்கிறது.

> *ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் வேலை பார்க்கும் பெண் தொழிலாளிகள், குழந்தைப் பராமரிப்பில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், குழந்தைப் பராமரிப்பு தொடர்பான அவர்களின் தேவைகளும் போன்ற பல கேள்விகள் பதிலுரைக்கப்படாமல் இருக்கின்றன.*

## ஆய்வின் நோக்கங்கள்

- ❑ பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பெண் பணியாளர்களின் பணி நிலைமைக்கும் அவர்களின் குழந்தைப் பராமரிப்பிற்கும் உள்ள தொடர்பினை அறிவது.
- ❑ வெளி வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்பில் எதிர் கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றி சித்தரிப்பது.
- ❑ வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் குழந்தை பராமரிப்பை சமாளிக்கும் விதத்தை கண்டறிவது.
- ❑ மூத்த குழந்தைகளின் மீது சிறு குழந்தைப் பராமரிப்புப் பொறுப்பு ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி அறிவது.
- ❑ பாலூட்டும் தாய்மார்கள் கையாளுகிற முறைகளுக்கும், அவர்களுடைய பணிக்கும் உள்ள தொடர்பினை ஆராய்வது.
- ❑ நடைமுறையில் உள்ள குழந்தை பராமரிப்பு வசதிகளை தாய்மார்கள் பயன்படுத்தும் விதங்கள் பற்றி நிறுவுவது.
- ❑ அரசாங்கமும் தன்னார்வ நிறுவனங்களும் அளிக்கும் குழந்தை பராமரிப்பு சேவையின் தரம் பற்றி உழைக்கும் மகளிரின் அபிப்ராயங்களை அறிவது.

---

தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கப்படாத தொழிற்பிரிவுகளில் 57 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் வேலை பார்க்கின்றனர். விவசாயம், தோட்டத் தொழில், கல் உடைத்தல், மீன் வியாபாரம், பீடி சுற்றுதல், வீட்டு வேலை, நகர சிறு வியாபாரம், கட்டிட வேலை என பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சார்ந்த ஆயிரம் பெண்களிடம் ஆய்வின் நோக்கங்கள் தொடர்பான கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

---

# குழந்தைப் பராமரிப்பைப் பாதிக்கும் பணி நிலைமைகள்

பெண்கள் பணிபுரியும் ஒருங்கிணைக்கப் படாத தொழிற் துறையானது, பல்வேறுபட்ட முற்றிலும் ஒன்றுக்கொன்று வேறுபாடுகளைக் கொண்ட தொழிற் பிரிவுகளைக் கொண்டது. பல்வேறு தொழில்களுக்கிடையேயான வேறு பாடுகள், ஒவ்வொரு தொழிலுக்குமேற்ப, இளம் குழந்தைகளின் தாய்மார்களுக்குப் பிரத் யேகமான பிரச்சனைகளைத் தருகின்றன. ஆதலால், குழந்தைப் பராமரிப்பின் அடிப் படையில் இத்தொழில்களின் பரிமாணங் களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண் டியது அவசியமாகிறது.

## நேரம்

வெளி வேலைக்குச் செல்லும் பெண் களைப் பொறுத்தவரை அவர்களின் வேலை நேரத்திற்கு ஏற்றாற்போல் வீட்டுநிர்வாகத் திற்கும், குழந்தைப் பராமரிப்பிற்கும் செலவிடும் நேரம் மாறுபடுகிறது. ஊதிய உழைப்பிற்கான நேரம் அதிகரிக்கும்போது அது வீட்டு நிர்வாகத் திற்கும் குழந்தைப் பராமரிப்பிற்கும் செலவிடும் நேரத்தை குறைக்கிறது.

வெளி வேலைக்குச் செல்லும் முன், பெண்களுக்கு தோராயமாக 3 மணி நேரமே கிடைக்கிறது. 31% பெண்களுக்கு 2 மணி நேரமே கிடைக்கிறது. இந்த நேரத்திற்குள் அவர்கள் வீட்டு வேலைகளை முடித்து, சமையல் முடித்து, குழந்தைகளை கவனித்து, அவர்கள் வேலைக்குச் செல்ல தயாராவதற் கான நேரத்தையும் ஒதுக்க வேண்டி உள்ளது.

ஆராய்ச்சியில் பதில் அளித்த பெண்களில் 80% 8 மணிக்குள்ளாகவே வெளி வேலைக்குக் கிளம்ப வேண்டியிருக்கிறது. 75% பெண்கள் வேலை முடிந்து 5 மணிக்கே வீடு திரும்பு கிறார்கள். (சராசரியாக வேலையிருந்து பெண் கள் திரும்பும் நேரம் மாலை 5.20)

காலை 6 மணிக்கு வெளி வேலைக்கு கிளம்பும் பெண்களில் 24% பெண்கள் மாலை 6 மணிக்குப் பிறகே வீடு திரும்புகிறார்கள். அதாவது இவர்கள் 12 மணி நேரம் வீட்டிலிருந்து வெளியே இருக்க வேண்டி இருக்கிறது.

வெளி வேலைக்குச் செல்லும் பெண்கள் சராசரியாக 10 மணி நேரமாவது வீட்டை விட்டு வெளியே இருக்கவேண்டி இருக்கிறது.

அதேபோல் ஒருங்கிணைக்கப்படாத தொழில்களில் உழைக்கும் மகளிரில் 40% பெண்கள் வாரம் முழுவதும் வேலைக்குச் செல்கிறார்கள். 48% பெண்கள் வாரத்தின் 6 நாட்கள் வேலைக்குச் செல்கிறார்கள். இம் மாதிரி நீண்ட நேரம் ஒரே நாளிலும், வாரம் முழுவதும் தாய் குழந்தையிடமிருந்து விலகி இருக்க வேண்டி இருப்பது குழந்தையின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## வேலைத்தளத்திற்குச் செல்லும் தூரம்

பெண்களின் வேலைத் தளத்திற்கான தூரம் அதிகரிக்க, அதிகரிக்க அவர்கள் பயணத் திற்காக ஒதுக்கும் நேரம் அதிகரிக்கிறது. இது தாயிற்கும், குழந்தைக்குமான நேரத்தை மேலும் குறைக்கிறது. 52% பெண்களுக்கு 2 கி.மீ.க்கும் குறைவான தூரத்தில் வேலைத்தளம் இருந் தாலும், கணிசமான பெண்களுக்கு (28%) வேலைத்தளம் 6 கி.மீ.க்கும் அதிகமான தூரத் தில் உள்ளது.

## மகப்பேறுக்கு பிந்தைய ஓய்வு

மகப்பேறுக்கு பிறகு ஒரு தாய்க்கு நல்ல ஓய்வு தேவை என்பது தெரிந்ததே. இது முடியாமல் ஒரு தாய் வேலைக்குப் போக நேர்ந் தால், அவளுக்கு குழந்தையுடன் இருப்பதற் கான நேரம் குறைகிறது. அவள் உடலிலும், மனதிலும் அயர்ச்சி ஏற்படுகிறது. குழந்தை தாய் இருவரின் உடல்நிலையும், ஊட்டச்சத்தும் பாதிக்கப்படுகிறது.

தாய்க்குப் போதுமான ஓய்வு கிடைப்பதை உறுதி செய்யவும், குழந்தைக்கும் முதல் நான்கு மாதங்களுக்கு, முழுக்கமுழுக்க தாய்ப்பால் கிடைப்பதற்கு வழிசெய்யவும், குழந்தை பிறந்த முதல் நாலு மாதங்களாவது தாய் வேலைக்குப் போவதிலிருந்து விலகி இருக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆனால், ஒருங்கிணைக்கப்படாத துறை களில் வேலை பார்க்கும் பெண்களுக்கு இம் மாதிரியான ஓய்வுக்காலம் எட்ட முடியாத உச்சாணிக் கொம்பாகவே இருக்கிறது.

70%க்கும் மேலான தாய்மார்கள் பிரசவத் திற்கு பிறகு மூன்று மாதத்திற்கும் குறைவாகவே ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள். 16% பெண்கள் ஒரு மாத ஓய்விற்குப் பிறகு தங்களுடைய வேலைக்கு திரும்பி விடுகிறார்கள். 10% மட்டுமே நாலு மாதங்களுக்கு மேல் ஓய்வு எடுக்கிறார்கள். பிரசவத்திற்கு பின்னர் இந்த பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய சராசரி ஓய்வுக் காலம் 2.6 மாதங்களே.

ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவு களில் பணிபுரியும் பெண்களின் பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம் என்பது புலனாகிறது. தாய்மார்கள் தொடர்ந்து 2,3 மாதங்களுக்கு தங்கள் சம்பளத்தை இழக்க முடியாத நிலையில் உள்ளனர். பிரசவத்திற்குப் பின் தாய் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது என்ற வழக்கத்தின் படியே பல தாய் மார்கள் குறைந்த பட்சம் 21 அல்லது 40 நாட்கள் வரை ஓய்வெடுக்கின்றனர். தாய் சேய் ஆரோக் கியத்தை மனதில் கொண்டே முன்னோர்கள் இந்த ஓய்வுக்கால அவசியத்தை நிர்ணயித் திருக்கிறார்கள் போலிருக்கிறது. எனினும் தாய்க் கும் சேய்க்கும் இந்த கால அவகாசம் போது மானதல்ல என்பது தெரிந்ததே.

## ஓய்வுக் காலத்தைப் பாதிப்பவை

குழந்தைப் பராமரிப்பிற்குத் தாய்க்கு இருக் கக்கூடிய வழிமுறைகளும் மகப்பேறு ஓய்வுக் காலத்தை தீர்மானிப்பதில் பங்கு வகிக்கிறது. வீடு சார்ந்த பணிகளில் ஈடுபடும் பெண் தொழிலாளிகளில் 43% பெண்கள் மகப் பேறுக்குப் பிறகு ஒரு மாதமே ஓய்வெடுக் கின்றனர். தமது பணியிடத்துக்கு குழந்தையை எடுத்துச் செல்கிறவர்களும் (37%) குழந்தையை

*தாய்க்குப் போதுமான ஓய்வு கிடைப்பதை உறுதி செய் யவும், குழந்தைக்கும் முதல் நான்கு மாதங்களுக்கு, முழுக்கமுழுக்க தாய்ப்பால் கிடைப்பதற்கு வழிசெய்ய வும், குழந்தை பிறந்த முதல் நாலு மாதங்களாவது தாய் வேலைக்குப் போவதிலி ருந்து விலகி இருக்க வேண் டியது அவசியமாகிறது.*

வீட்டிலேயே பிறரிடம் விட்டுவிட்டுச் செல்கிறவர்களும் (35.4%) பிரசவத்திற்குப் பின் ஒன்றிலிருந்து இரண்டு மாதங்கள் மட்டுமே ஓய்வெடுக்கின்றனர். குழந்தை பராமரிப்பு மையங்களை பயன்படுத்தும் 43.7%, 3 மாதங்களுக்கு மேல் வீட்டில் ஓய்வெடுக்கின்றனர்.

குடும்பத்தில் குழந்தையைப் பராமரிக்க மூத்த குழந்தைகள் இருப்பதற்கும் பிரசவத்துக்குப் பிறகு தாய் எடுத்துக் கொள்ளும் ஓய்வு காலத்துக்குமிடையே உள்ள உறவு தீவிரமான பிரச்சனைகளை உள்ளடக்கியிருப்பது தெரிய வருகிறது. உதவிக்கு, பள்ளிக்குச் செல்லாத மூத்த குழந்தைகள் இருக்கும் பட்சத்தில் தாய்மார்கள் பிரசவத்துக்குப் பின் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். குழந்தை பராமரிப்பிற்காக மூத்த குழந்தைகளை பள்ளியிலிருந்து நிறுத்தி வைப்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

## குழந்தை பற்றி தாயின் தவிப்பு

குழந்தையை வீட்டில் இன்னொருவர் பராமரிப்பில் விட்டுவிட்டு வந்தாலும் பணிபுரியும் இடத்துக்குக் கூடவே எடுத்துச் சென்றாலும், பணியில் ஈடுபட்டிருக்கும்போது குழந்தையின் பாதுகாப்புப் பற்றிய எண்ணங்கள் சூழப்பட்டு தவிப்புடனே தாய் இருக்கிறாள்.

அதிலும் குறிப்பாக ஒருங்கிணைக்கப் படாத துறைகளில் வேலை பார்க்கும் பெண்களுக்கு, அவர்கள் வேலை பார்க்கும் நேரத்தில் பல்வேறுபட்ட காரணங்களால் குழந்தைகளுக்கு சரியான பாதுகாப்பு வசதி ஏற்படுத்தித் தர முடியாமல் போவது அவர்களை ஆழமாகவும், அதிகமாகவும் கவலைப்பட வைத்து விடுகிறது.

கட்டிட வேலையிலும் கல்லுடைக்கும் இடத்திலும் விவசாய நிலங்களிலும் உள்ள பாதுகாப்பற்ற சூழல் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு ஏதுவானதாக இல்லை. ஒழுங்காகப் பாலூட்ட முடியாததும் உணவூட்ட முடியாததுமே 60% தாய்மார்களின் முக்கியமாக கவலையாக இருக்கிறது. பிறர் பொறுப்பில் குழந்தைகள் சரிவர கவனிக்கப்படாமல் போகலாம் என்பது, குழந்தைகளுக்கு அடிபட நேருவதற்கான சாத்தியக் கூறுகள் போன்றவை மற்ற கவலைகள்.

## வருமானம்

ஆராய்ச்சியில் பங்கு கொண்ட பெண்கள், சராசரியாக ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்யும் அவர்களின் மாத வருமானம் மிகவும் குறைவாகவே இருந்தது. 24% பெண்களே மாதம் 400 ரூபாய்க்கும் அதிக ஊதியம் பெறுகின்றனர். இந்த பெண்களின் சராசரி மாத வருமானம் ரூபாய் 322/– மட்டுமே.

குடும்பத்தின் மொத்த வருமானத்தில் இந்த பெண்களுடைய பங்கு, குழந்தை பராமரிப்புப் பிரச்சனைக்கு இன்னொரு பரிமாணத்தைத் தருகிறது. 64% பெண்கள் குடும்பத்தின் மொத்த வருமானத்தில் பாதியைத் தாங்கள் சம்பாதிப்பதாகக் கூறுகிறார்கள். 6% பெண்களின் வருமானம் முக்கால் பங்குக்கும் மேலாக இருக்கிறது. குடும்பத்தின் வருவாய்க்குப் பெண்களின் பங்கு அத்தியாவசியமாவதால் குழந்தை நலம் பேணுவதற்கு முன்னுரிமை அளிக்க முடியாத நிர்பந்தத்தை அது ஏற்படுத்துகிறது.

ஒவ்வொரு தொழிலுக்கும் இடையே தொழில் சார்ந்த நிலைமை காரணமாக பெரும் வேறுபாடுகள் நிலவுகின்றன. பணி நிலைமைக்கு ஏற்ப உழைக்கும் தாய்மார்களின் குழந்தைப் பராமரிப்புத் தேவை மாறுபடுகிறது. குழந்தைப் பராமரிப்பின் இந்தப் பன்முகத் தேவையை அரசும், சமூகமும் மனதில் கொள்ள வேண்டும்.

# குழந்தை பராமரிப்புக்கான வழிமுறைகள்

கைக்குழந்தை உள்ள ஒவ்வொரு உழைக்கும் பெண்ணும், அவள் வேலை பார்க்கும் நேரத்தில், குழந்தை பராமரிப்புக்கு சரியான தொரு வழிமுறையைக் கண்டு பிடிக்கும் சிக்கலில் இருக்கிறாள். குழந்தையின் நலனுக்கு மிகவும் பாதுகாப்பான ஒருவழி முறையைத் தேர்ந்தெடுப்பதில் அவள் கவனமாக இருக்கிறாள். சமயங்களில் பல்வேறு சிக்கல்கள் காரணமாக, குழந்தையின் வளர்ச்சிக்கு சரியாக பொருந்தக்கூடிய முறையை அவளால் தேர்ந்தெடுக்க முடியாமல் போகிறது. ஒவ்வொரு முறையிலுள்ள லாப நஷ்டங்களை ஆராய்ந்து தன் குழந்தைக்கு மிகவும் பொருந்தக்கூடியதும், பொருளாதார ரீதியில் அவளால் சாத்தியப்படக் கூடியதுமான ஒரு முறையைத் தேர்வு செய்கிறாள். குழந்தை பராமரிப்புக்கு அவளுக்கு இருக்கக்கூடிய வழிகளையும், அவளுடைய தொழிலின் தன்மை சார்ந்த பல்வேறு விஷயங்களையும் ஒட்டியே அவள் இந்தத் தேர்வை செய்கிறாள். உழைக்கும் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்புக்கு முக்கியமான நான்கு வழிமுறைகளைக் கையாளுகிறார்கள். வேலைத்தளத்தில் குழந்தையைப் பராமரிப்பது, குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவது, வீட்டில் மற்றவர்களால் குழந்தையைக் கவனிப்பது, வீடு சார்ந்த பணிகளில் ஈடுபடும் பெண்கள். வீட்டிலேயே குழந்தையைப் பராமரிப்பது.

ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் 37% பெண்கள் வீட்டிலேயே குழந்தையை விட்டுச் செல்கிறார்கள். இந்த 37%ல், 12% பெண்கள் மூத்த குழந்தைகளின் கவனிப்பிலேயே குழந்தையை விட்டுச் செல்கிறார்கள். 5% பெண்கள் குழந்தையை யார் கவனிப்பும் இன்றி தனியே வீட்டில் விட்டுச் செல்கிறார்கள். 25% பெண்கள் குழந்தையை வேலையிடத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். 29% பெண்கள் குழந்தைகளை பராமரிப்பு மையத்தில் விட்டுச் செல்கிறார்கள். குழந்தை பராமரிப்பு வழிமுறைகளின் தேர்வில் மிகவும் குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால், 50% பெண்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்பு முறைகளை தவிர மாற்று வழிமுறைகள் ஒன்றும் இல்லை என்பதே.

## தொழிலும் பராமரிப்பு வழிமுறைகளும்

விவசாயத்தில் ஈடுபடுவோரில் 67% பெண்கள் குழந்தையை வீட்டிலேயே விட்டுச் செல்கிறார்கள். கட்டிடத் தொழிலாளர்களில் 43% பெண்களும், கல்லுடைக்கும் தொழிலாளர்களில் 30% பெண்களும் ஆபத்தான வேலை தளத்திற்கே குழந்தைகளை எடுத்துச் செல்கின்றனர். அதேபோல வீட்டு வேலை பார்ப்பவர்களில் 26% பெண்கள், விவசாயக் கூலிகளில் 22% பெண்கள் குழந்தையைத் தம் வேலையிடத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

தமிழ்நாட்டில் குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் பரவலாக இருக்கிறபோதிலும் பலர் அங்கு விடப்படுவதற்குத் தகுதியுள்ள (3–6 வயது) குழந்தைகளை அங்கே அனுப்புவதில்லை. விவசாயக் கூலிகளில் 20% பெண்களும், நெசவு மற்றும் கைவினைப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுவோரில் 21% பெண்களும், பீடி சுற்றும் தொழிலாளர்களில் 17% பெண்களும் 3–6 வயதுள்ள குழந்தைகளை குழந்தை

பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புகின்றனர். பொதுவாக அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங் களின் குழந்தை பராமரிப்பு மையங்கள் மாலை 3 அல்லது 4 மணிக்கு மூடப்பட்டு விடுவதால் குழந்தைகளை அங்கு அனுப்புவது மிகவும் விரும்பத்தக்கதாக இல்லை. காப்பக நேரம் முடிந்தபின், பெண்கள் வேலையிலிருந்து வரும் வரை குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள இவர்கள் வேறு வழிகள் தேட வேண்டியுள்ளது. அதிலும் 2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் சிலரைத்தான் காப்பகங்களில் விடமுடியும். கல்லுடைக்கும் தொழிலாளர்களும் மீனவர் களுமே குழந்தை பராமரிப்பு மையத்துக்குப் பெருமளவில் (70%க்கு மேல்) குழந்தைகளை அனுப்புகிறார்கள்.

வேலைக்குக் கிளம்பும் நேரமும், வேலை யிலிருந்து திரும்பும் நேரமும், வீட்டுக்கும் வேலையிடத்துக்கும் இடையே உள்ள தூரமும் குழந்தை பராமரிப்பு முறைகளின் மீது பிரதான செல்வாக்கு செலுத்துகின்றன. குழந்தை பரா மரிப்பு நிலையத்துக்கும் வீட்டுக்குமிடையே உள்ள தூரமும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பத்தின் அளவும் குடும்பத்தின் தன்மை யும் கூட குழந்தை பராமரிப்பு வழிமுறையைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு வகிக்கின்றன.

## காலை நேரத்தில் குழந்தை பராமரிப்பு

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குக் காலை வேலைகளில் வீட்டு வேலையிலும் குழந்தை பராமரிப்பிலும் தன் கணவனிடமிருந் தும் குடும்பத்தாரிடமிருந்தும் பெரும் உதவி தேவைப்படுகிறது. வேலைக்குச் செல்லும் கிராமப்புறப் பெண்களின் நிலமை மிகவும் சிரம மானது. தண்ணீர் எடுக்கவும், எரிபொருள் சேகரிக்கவும், கால்நடை பராமரிப்புக்கும் கணி சமான நேரத்தை அவர்கள் செலவிட நேர்கிறது. வீட்டு வேலைகளோடு, குழந்தையைக் குளிப் பாட்டுவது, உணவூட்டுவது, காலைக்கடன் கழிக்க வைப்பது போன்றவற்றை அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இவற்றோடு வேலைக்குக் கிளம்ப தன்னையும் அவள் ஆயத் தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவை அனைத் தையும் அவர்கள் காலை 7.30 மணிக்கு முன்னால் முடிக்க வேண்டியிருக்கிறது.

பதிலளித்தவர்களில் 93% பெண்கள் காலை வேளைகளில் குழந்தை தொடர்பான செயல்பாடுகளை எவ்வித உதவியுமின்றி தாமே செய்கின்றனர். 1%க்கும் குறைவான பெண் களுக்கே கணவன்மார்கள் குழந்தைப் பரா மரிப்பில் உதவி செய்கிறார்கள். 2% பெண் களுக்கு மூத்த குழந்தைகள் உதவிகரமாக இருக்கிறார்கள்.

குழந்தை நோய்வாய்பட்டால் 73% தாய் மார்களே வீட்டிலிருந்து கவனிக்கும்படி ஆகிறது. 10% பெண்கள் குழந்தையின் சிகிச் சைக்கும் பராமரிப்புக்கும் ஏற்பாடுகள் செய்து விட்டு வேலைக்குச் செல்கிறார்கள்.

ஒருங்கிணைக்கப்படாத தொழிற்பிரிவு களில் பணிபுரியும் பெண்கள் எவ்வளவோ சங் கடங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இடையே குழந்தைப் பராமரிப்பை ஏதோ ஒரு வகையில் சமாளிக்கிறார்கள். பொருளாதார ரீதியிலான அவர்களுடைய வளர்ச்சிக்கும், அவர்களுடைய குழந்தைகள் முறையாகப் பேணப்படுவதற்கும் உத்திரவாதம் அளிக்கும் வகையில் இத்தகைய பெண்களுக்குத் தேவையான உதவிகள் அளிக் கப்பட வேண்டும்.

*காப்பக நேரம் முடிந்தபின், வேலையிலிருந்து வரும் வரை குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள பெண்கள் வேறு வழிகள் தேட வேண்டியுள்ளது.*

# குழந்தை பராமரிப்புக்கான வழி முறைகளும் நடைமுறைச் சிக்கல்களும்

உழைக்கும் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்புக்கு முக்கியமான நான்கு வழிமுறைகளைக் கையாளுகிறார்கள். வேலைத்தளத்தில் குழந்தையைப் பராமரிப்பது, குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவது, வீட்டில் மற்றவர்களால் குழந்தையைக் கவனிப்பது, வீடு சார்ந்த பணிகளில் ஈடுபடும் பெண்கள் வீட்டிலேயே குழந்தையைப் பராமரிப்பது.

## வேலையிடத்தில் குழந்தை பராமரிப்பு

ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் 25% பெண்கள் குழந்தைகளைத் தம்முடன் வேலையிடத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள். தாய்மார்களோடு வேலையிடத்துக்குச் செல்லும் குழந்தைகளின் சராசரி வயது 25.1 மாதங்கள். வீட்டுக்கும் வேலையிடத்துக்கும் இடையே உள்ள தூரம் சராசரியாக 3.4 கி.மீ.

வேலையிடத்துக்கு குழந்தைகளை எடுத்துச் செல்வதென்பது, பணி நிலைமைகளை முன்வைத்துப் பார்த்தால் குழந்தை பராமரிப்பு வழிமுறைகளிலேயே மிகவும் அசௌகர்யமானதாகவும், தாய்க்கும் சேய்க்கும் மிகுந்த சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. பணியிடத்துக்கு குழந்தையை எடுத்துச் செல்லும் தாய்மார்களில் 80% பெண்கள் வேறெந்த வசதியும் இல்லாததாலேயே இதை மேற்கொள்வதாக தெரிவித்தனர். தாயின் கவனிப்பில் குழந்தை இருப்பதே பாதுகாப்பானது என்று 49% பெண்கள் நினைப்பதும் ஒரு காரணம். சின்னஞ்சிறு குழந்தையாக இருப்பதால் வீட்டில் மூத்த குழந்தைகளிடம் விட்டுவிட்டு வரமுடியாத நிலை 31% பெண்களுக்கு காரணமாக இருக்கிறது.

வேலையிடத்தில் குழந்தை பராமரிப்புக்கென்று எவருக்கும் எந்த வசதியும் முதலாளிகளால் செய்து தரப்பட்டிருக்கவில்லை. குழந்தையை வேலையிடத்துக்கு எடுத்துச் செல்வதால் வேலையின் அளவு குறைவதே முக்கிய பிரச்சனை என்று 53% பெண்கள் கருதுகின்றனர். வேலையிடத்தில் உரிய நேரத்தில் பாலூட்ட முடிவதில்லை என்று 73.2% பெண்களும், விபத்துகளை 43% பெண்களும், இயற்கை ஆபத்துக்களை 40% பெண்களும் பிரச்சனைகளாக முன் வைக்கின்றனர். அதே சமயம் சக தொழிலாளிகளும் முதலாளியும் குழந்தையைப் பணியிடத்தில் பராமரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதில்லை என 80% பெண்கள் கூறுகிறார்கள். பணியிடத்தில் 85% பெண்கள் அவர்களே அவர்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்கிறார்கள். 7% பெண்கள், மற்றவர்கள் அவர்கள் குழந்தையை பார்த்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

8% பெண்கள், தங்களின் மூத்த குழந்தைகளும் பிற குழந்தைகளும் சிறு குழந்தையை பார்த்துக் கொள்வதாகச் சொன்னார்கள். பெரிய குழந்தைகள், சிறு குழந்தைகளை பார்த்துக் கொள்வதோடு வேலைத்தளத்தில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தல், வெற்றிலை வாங்கிக் கொடுத்தல் போன்ற எடுபிடி வேலைகளையும் செய்கிறார்கள். கல்வி வாய்ப்பு மறுக்கப்படும் இவர்கள் தாயின் வழியிலேயே அதே தொழிலில் ஈடுபட நேரிடலாம்.

வேலையில் ஈடுபடும்போது, ம்ண்ணையோ வேறு அபாயமான பொருளையோ குழந்தைகள் தின்று அவர்களுக்கு வயிற்றுப் போக்கு

ஏற்படுகிறது. தாய் குழந்தைக்கு அருகாமையில் இருந்தாலும் கூட அவளால் போதுமான கவனிப்பை அளிக்க முடியாமல் போவதால் சமயங்களில் குழந்தை கிணற்றிலும் குழியிலும் கூட விழுந்து விடுகிறது. சமயங்களில் அது மரணத்தில்கூட முடிகிறது.

## குழந்தை பராமரிப்பு மையங்களில் குழந்தை பராமரிப்பு

பதிலளித்தவர்களில் 29% பெண்கள் அருகிலுள்ள குழந்தை பராமரிப்பு மையத்துக்குக் குழந்தைகளை அனுப்புகிறார்கள். அவர்களுள் 74% பெண்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு மையத்துக்கும் மீதமுள்ள 26% பெண்கள் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தனியார் நடத்தும் குழந்தை பராமரிப்பு மையத்துக்கும் குழந்தைகளை அனுப்புகின்றனர். 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 70% குழந்தைகள் தன்னார்வ மற்றும் தனியார் மையங்களிலேயே விடப்படுகிறார்கள்.

வீட்டில் கவனித்துக்கொள்ள வேறு எவரும் இல்லாததாலேயே குழந்தையை குழந்தை பராமரிப்பு மையத்துக்கு அனுப்புவதாக 53% பெண்கள் கூறுகிறார்கள். குழந்தைகள் எழுதப் படிக்க அல்லது அதற்கான அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்ள குழந்தை பராமரிப்பு மையம் வகை செய்வதால் அங்கு அனுப்புவதாக 83% பெண்கள் தெரிவிக்கிறார்கள். வேலையிடத்தில் பராமரிக்க முடியாத நிலைமையால் குழந்தை பராமரிப்பு மையத்துக்கு அனுப்புவதாகச் சொன்னவர்கள் 28% பெண்கள்.

வேலையிடம் தொலைவில் இருப்பதால் குழந்தைகளை குழந்தை பராமரிப்பு மையத்துக்கு அனுப்புவது இவ்வாய்வில் தெரியவந்தது. மேலும் குழந்தை பராமரிப்பு மையம் வீட்டுக்கு அருகில் இருக்கும் பட்சத்திலும் குழந்தைகளை அங்கு அனுப்புகிறார்கள் என்பதையும் அறிய முடிந்தது.

குழந்தை பராமரிப்பு மையத்தில் உணவு அளிக்கப்படுவதும் 23% குழந்தைகளை அனுப்புவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. கிராமத்தில் சும்மா சுற்றிக் கொண்டிராமல் பராமரிப்பு மையங்களில் குழந்தை பயனுள்ள வகையில் நேரத்தைச் செலவிடுவதாகக் கருதுவதும் மற்றொரு காரணம்.

குழந்தை பராமரிப்பு மையத்தின் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிய அபிப்பிராயங்களை அறிய முற்பட்டதில், உணவூட்டுவது தவிர அதன் பிற காரியங்களில் திருப்தியடைந்தவர்கள் 50%க்கும் குறைவாகவே இருந்தார்கள். காப்பக நேரம் மிகக் குறைவானவர்களுக்கே (33%) நிறைவளிக்கிறது. 51% பெண்களுக்கு மைய நேரம் அதிருப்தியையே அளிக்கிறது.

பெரும்பாலான தாய்மார்கள் காலை 7.30 மணிக்கெல்லாம் வேலைக்குக் கிளம்பிவிடுகிற நிலையில் குழந்தை பராமரிப்பு மையம் காலை 8.30 அல்லது 9 மணிக்கே திறக்கப்படுவதால் இந்த அதிருப்தி புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அது போன்றே, பெரும்பாலான

> *குழந்தை பராமரிப்பு மையத்தின் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிய அபிப்பிராயங்களை அறிய முற்பட்ட தில், உணவூட்டுவது தவிர அதன் பிற காரியங்களில் திருப்தியடைந்தவர்கள் 50%க்கும் குறைவாகவே இருந்தார்கள்.*

தாய்மார்கள் வேலையிலிருந்து மாலை 5 மணிக்கே திரும்ப முடிகிற நிலையில் குழந்தை பராமரிப்பு மையம் மதிய உணவுடனோ அல்லது மூன்று மணிக்கே மூடப்பட்டு விடுவதும் அதிருப்தியளிக்கிறது.

48–50% பெண்கள், உறங்க வைத்தல், விளையாட்டுகள், திறமைகளுக்கான பயிற்சி போன்ற குழந்தை பராமரிப்பு மையப்பணிகளில் திருப்தி தெரிவித்தனர்.

## வீட்டில் பிறரால் குழந்தை பராமரிப்பு

வீட்டில் விட்டுச் செல்லப்படும் குழந்தைகளை, மூத்த குழந்தைகள், உறவினர், அண்டை வீட்டார், வயதான உறவினர் கவனித்துக் கொள்கிறார்கள். சில குழந்தைகள் வீட்டில் தனியேவும் இருக்கின்றனர். வீட்டில் விடப்படும் குழந்தையின் சராசரி வயது 21.3 மாதங்கள்.

50% பெண்களுக்கும் மேலானோர் வீட்டில் குழந்தையைக் கவனித்துக் கொள்பவர்களின் பராமரிப்பு குறித்து திருப்தி கொள்கிறார்கள்.

குழந்தையுடன் போதிய நேரம் செலவிடாமல் இருப்பது, கவனிப்பவரின் ஈடுபாடின்மை, உடல் நலமின்மை, மூப்பு, பிரியமின்மை, மூத்த குழந்தைகளின் இளவயது போன்றவை இத்தகைய பராமரிப்பில் ஏற்படும் அதிருப்திக்கான காரணங்களாக சொல்லப்பட்டன. காலையில் நேரம் குறைவாக இருந்தாலும், இந்தத் தாய்மார்கள் வேலைக்குச் செல்வதற்கு முன்னதாகவே குளிப்பாட்டுதல், உணவு கொடுத்தல் போன்ற சிறு குழந்தை பராமரிப்பு தொடர்பான வேலைகளை முடித்து விட்டே செல்கின்றனர். 53% பெண்களுக்கு, இந்த வேலைகளுக்கு குடும்பத்தாரிடமிருந்து உதவி கிடைப்பதாகத் தெரிய வந்தது.

## வீட்டை பணித்தளமாக கொண்டவர்கள்

பதிலளித்தவர்களில் 10% பெண்கள், பீடி சுற்றுதல், நெசவு, மண் பாண்டங்கள் செய்தல் போன்ற வீடு சார்ந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பகல் முழுவதும் குழந்தைக்கு அருகிலேயே இருப்பதால் பிற உழைக்கும் மகளிரை விட குழந்தை பராமரிப்பில் கூடுதல் கவனம் செலுத்த முடிபவர்களாக இருக்கிறார்கள். குழந்தை ஒரு நல்ல பாதுகாப்பு உணர்ச்சியுடன் வளரமுடிகிறது.

எனினும், இடையிடையே குழந்தையைப் பராமரிப்பது, வருவாய் ஈட்டும் செயல்பாடுகளுக்கு இடையூறாக இருக்கிறதென்று 60% பெண்கள் அபிப்ராயப்பட்டனர். வேலையின் அளவை அது பாதிப்பதாக 80% பெண்கள் குறிப்பிட்டார்கள்.

குழந்தை பராமரிப்பு வழிமுறைகளின் தேர்வில் மிகவும் குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால், 50% பெண்களுக்கு மேற் குறிப்பிட்ட பராமரிப்பு முறைகளை தவிர மாற்று வழிமுறைகள் ஒன்றும் இல்லை என்பதே.

*பெரும்பாலான தாய்மார்கள் வேலையிலிருந்து மாலை 5 மணிக்கே திரும்ப முடிகிற நிலையில் குழந்தை பராமரிப்பு மையம் மதிய உணவுடனோ அல்லது மூன்று மணிக்கே மூடப்பட்டு விடுவதும் அதிருப்தியளிக்கிறது.*

# தாய்ப் பாலூட்டலும் வேலையும்

வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தாய்ப் பாலூட்டுவது, வேலை என்ற இரண்டையும் சமாளித்தாக வேண்டிய பிரச்சனை காலம் காலமாக நீடித்து வருகிறது. குழந்தையின் ஆரோக்கியத்துக்கு 4–6 மாதம் வரை தாய்ப்பால் கொடுக்க வேண்டியது மிக அவசியம். ஆக, இக்காலத்தில் தாய் குழந்தையின் அருகிலேயே எப்பொழுதும் இருக்க வேண்டிய கட்டாய மிருக்கிறது. குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதில் ஒரு பெண் கையாளுகிற முறைக்கும், அவளுடைய வேலையின் தன்மைக்கும் தொடர்பிருக்கிறது. வேலை காரணமாக தாய்ப்பால் ஊட்டுவதில் சிக்கல்கள் ஏற்படும்பொழுது, ஒன்று வேலைக்கு போவதை தவிர்த்து வருமானத்தை இழக்கிறாள் அல்லது பொருளாதார நிர்ப்பந்தங்கள் அதிகமாகும் பொழுது தாய்ப்பால் தருவதின் எண்ணிக்கையை குறைத்தோ அல்லது தாய்ப்பால் தருவதை நிறுத்தியோ குழந்தையின் ஆரோக்கியத்தை வேறு வழியில்லாமல் விட்டுக் கொடுக்கிறாள்.

## வேலையிடத்தில் தாய்ப் பாலூட்டுதல்

தாய்ப்பால் ஊட்டுவதற்கான அனுசரணையான சூழலைப் வேலையிடம் அளிப்பதில்லை. 82% பெண்கள் இதையே மிகப் பெரிய பிரச்சனையாக முன்வைக்கின்றனர். போதுமான நேரமின்மையும், தூசி, சத்தம் போன்ற மாசுற்ற சூழலும், சௌகர்யமாய் உட்கார்ந்து தாய்பாலூட்டக்கூடிய தனியிடம் இல்லாமல் போவதும் வேலையிடத்தில் பாலூட்டுவதற்கு தடையாக இருக்கின்றன.

தாய்ப்பால் ஊட்டுவதற்கான சூழ்நிலை அமையாமல் போவதற்கான காரணங்களாக புழுதியையும், அதிக சப்தத்தையும் எல்லா கட்டிடப் பணியாளர்களும், கல்லுடைக்கும் தொழிலாளர்களும் முன்வைக்கின்றனர்.

50 சதவீதத்துக்கும் அதிகமான பெண் விவசாயக் கூலிகளும், தோட்டத் தொழிலாளர்களும் மற்ற வீட்டுப் பணியாளர்களும் ஒரு நாளைக்கு இரு முறைக்கு மேல் தம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்ட முடிவதில்லை என்கின்றனர். அதேசமயம் வீடு சார்ந்த் தொழில்களான பீடி சுற்றுதல், நெசவு போன்றவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் குழந்தைக்கு 6 முறைக்கு மேலாக பாலூட்டுவதாகக் கூறுகிறார்கள். மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் 4–6 முறை பாலூட்டுவதாக கூறுகிறார்கள்.

## தாய்ப்பால் ஊட்டுவதற்காக வேலையில் இருந்து நீங்குதல்

தாய்ப்பால் ஊட்ட வேண்டும் என்பதற்காகவே 31% த்தினர் வேலையிலிருந்து நின்று விட்டதாக கூறினார்கள். வருமான இழப்பினால் ஏற்படக்கூடிய பொருளாதார பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பது இதனால் புலப்படுகின்றது.

கல்லுடைத்தல் மற்றும் கட்டிட வேலை பார்ப்பவர்களில் 50% பெண்கள் தாய்ப்பால் ஊட்டுவதற்காக வேலையிலிருந்து நின்று விட்டனர். ஆனால் மற்ற தொழில்களில் ஈடுபடும் பெரும்பான்மையானவர்களால் இதைச் செய்ய முடிவதில்லை. கட்டிட வேலையில் இருப்பவர்களுக்கும், கல் உடைப்போருக்கும் வருடம் முழுவதும் வேலையிருக்கும். ஆனால் விவசாயக் கூலிகளுக்கும், தோட்ட தொழிலாளர்களுக்கும் வேலையானது குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே இருக்கிறது.

தாய்ப்பால் ஊட்டுவதற்காக வேலையிலிருந்து குறிப்பிட்ட காலத்துக்கு நின்று கொள்வதென்பது வேலைக்கேற்ப மாறுபடுகிறது. நகர சிறு வியாபாரம், தோட்ட வேலை, வீட்டு வேலை, பீடி சுற்றுதல் போன்ற வீட்டை பணித்தளமாக கொண்டவர்கள், விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுபவர்களில் 40–44% பெண்கள் தாய்ப்பால் ஊட்டுவதற்காக 3 மாதம் வேலையிலிருந்து நின்று விடுகிறார்கள். கட்டிட வேலையில் ஈடுபடுபவர்களில் 63% பெண்களும், கல் உடைப்போரில் 81% பெண்களும் தாய்ப்பால் ஊட்ட வேண்டி 3 முதல் 6 மாதம் வரை வேலையிலிருந்து நின்று விடுகிறார்கள்.

## இணை உணவு

தாய்மார்கள் குழந்தைக்கு இணை உணவை எத்தனையாவது மாதத்தில் தரத் தொடங்குகிறார்கள் என்பது அவர்களின் தொழிலைச் சார்ந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கட்டிட வேலை, கல் உடைத்தல், நெசவு போன்றவற்றில் ஈடுபட்டவர்களில் 80%க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைக்கு ஆறுமாதமான பிறகே இணை உணவை கொடுக்க ஆரம்பிக்கிறார்கள்.

வேலையிடத்துக்குக் குழந்தையை எடுத்துச் செல்பவர்களில் 87% பெண்களும், வீடு சார்ந்த பணிகளில் ஈடுபடுபவர்களில் 70% பெண்களும் குழந்தைக்கு 6 மாதத்துக்குப் பிறகே இணை உணவு தருகிறார்கள். குழந்தையை பிரிந்து அதிக நேரம் இருக்க நேர்வதாலும் குழந்தையின் உணவு தயாரிப்பிற்கு மற்றவர்களின் சேவையை நாட முடிவதாலும், வீட்டில் பிறரின் கவனிப்பில் குழந்தையை விட்டுச் செல்லும் தாய்மார்கள் இணை உணவுக்கு விரைவிலேயே மாறி விடும்படி ஆகிறது.

தாய்ப்பால் குழந்தையின் ஆரோக்கியத்துக்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுவதால், ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் பணிபுரியும் பெண்கள் தாய்ப்பால் ஊட்டுவதற்குத் தொழில் ரீதியாக இருக்கும் தடங்கல்களை அகற்றி, கூடுதல் வசதிகளை ஏற்படுத்த வகை செய்ய வேண்டும்.

*வேலை காரணமாக தாய்ப்பால் ஊட்டுவதில் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, ஒன்று வேலைக்கு போவதைத் தவிர்த்து வருமானத்தை இழக்கிறாள் அல்லது பொருளாதார நிர்ப்பந்தங்கள் அதிகமாகும் பொழுது தாய்ப்பால் தருவதின் எண்ணிக்கையை குறைத்தோ அல்லது தாய்ப்பால் தருவதை நிறுத்தியோ குழந்தையின் ஆரோக்கியத்தை வேறு வழியில்லாமல் விட் டுக் கொடுக்கிறாள்.*

# குழந்தை பராமரிப்பில் ஈடுபடும் மூத்த குழந்தைகள்

மூத்த குழந்தைகள் தம்பி, தங்கைகளை பார்த்துக்கொள்ள வேண்டியிருப்பதால் அவர்களின் இயல்பான வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. கல்வி, பொழுதுபோக்கு, தன் வயதொத்தவருடன் கூடிப் பழகுதல், கவலையற்ற வாழ்க்கை, போன்ற, வளர்ச்சிக்கு அவசியமான அம்சங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன.

### வயது

மூத்த குழந்தைகளால் பராமரிக்கப்படும் சிறு குழந்தைகளின் சராசரி வயது 2 வருடம் 4 மாதங்கள். எனினும், மூத்த குழந்தைகளால் பராமரிக்கப்படும் 58% சிறு குழந்தைகளின் வயது இரண்டுக்கும் குறைவானதே. குழந்தைகளைப் பராமரிக்கும் மூத்த குழந்தைகளில் 46 சதவீதத்தார் 4–8 வயது நிரம்பியவர்களே. 70% சிறுகுழந்தைகள் 4–8 வயது நிரம்பிய குழந்தைகளாலேயே பராமரிக்கப்படுகின்றனர். இவ்வளவு சிறு வயதிலேயே சிறு குழந்தையை பராமரிக்க வேண்டிய பொறுப்பை மூத்த குழந்தைகள் ஏற்பது, அவர்களின் வளர்ச்சியிலும், சிறு குழந்தைகளின் வளர்ச்சியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

### பெண்குழந்தைகள்

குழந்தைகளைப் பராமரிக்கும் மூத்த குழந்தைகளின் வயது 4 முதல் 16 வரை இருந்தது. (சராசரி வயது 9) இவர்களுள் 67% சிறுமிகளே. குழந்தைகளைப் பராமரிக்கும் சிறுவர்களில் 68%த்தினர் 8 வயதுக்கும் குறைவானவர்களே. சிறுமிகளில் 64%த்தார் 8 வயதுக்கும் அதிகமானவர்கள். 54% மூத்த குழந்தைகள், தாய் வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வரை பகல் முழுவதும் குழந்தையைப் பராமரிப்பதில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் 78% சிறுமிகளே. மூத்த குழந்தைகள் சிறு குழந்தைகளைப் பராமரிப்பதென்பது கிராமப்புறங்களிலேயே பெரும்பான்மையாக (86%) காணப்படுகிறது.

பராமரிப்பு பொறுப்பை ஏற்கும் மூத்த குழந்தைகளில் 56% பள்ளிக்குச் செல்வதில்லை. இந்தக் குழந்தைகளில் 81% சிறுமிகளே. சிறுவர்களை விடச் சிறுமிகளே குழந்தை பராமரிப்புப் பொறுப்பை அதிகம் சுமப்பவர்கள் என்று இதன்மூலம் தெரிகிறது.

### கல்வி வாய்ப்பின்மை

பள்ளிக்குச் செல்ல முடியாதவர்களில் 51 சதவீதத்தினர் ஆரம்பக் கல்வி நிலையிலேயே தமது படிப்பை நிறுத்திக் கொண்டவர்கள். மேலே கற்பதற்கான அடித்தளமாக அமைகின்ற வயதில் கல்வியை இழக்கும் இவர்களுக்கு மீண்டும் படிப்பை தொடர்வது கடினமாகிவிடும்.

ஆண்–பெண் இருபாலருக்கும் இடையே கல்வி நிலையின் எந்த கட்டத்தில் படிப்பைத் தொடர முடியாமல் போகிறதென்பதில் உள்ள வேறுபாடு ஆராயப்பட்டது. 64% சிறுமிகள் ஆரம்பக் கல்வியை முடிக்கும் முன்னரே தமது படிப்பைத் தொடர முடியாமல் போகிறது. இந்த நிலையில் பள்ளிக்கு போகாது நின்றவர்களில் சிறுமிகள் 84%. ஆரம்பப் கல்வி அளவிலேயே பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போவதற்கான முக்கிய காரணமாக, குழந்தை பராமரிப்பை சொன்னவர்கள் 71%. இதில் பெரும்பாலானவர்கள் சிறுமிகள் (84%).

## ஏன் இந்த நிலை

மூத்த குழந்தைகள், வேறு வழி இல்லாத காரணத்தாலேயே குழந்தை பராமரிப்பில் ஈடு படுத்தப்படுகிறார்கள். 71% பெண்கள் இதையே காரணமாக முன்வைக்கின்றனர். குழந்தை பராமரிப்பு மையங்கள் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க வகை செய்யாததே இந்நிலைக்குக் காரணம் என்ற உண்மையும் புலப்படுகிறது.

குழந்தைகளை வேலையிடத்துக்கு எடுத் துச் செல்ல முடியாத நிலையில், வேறு வழியே இல்லாமல் மூத்த குழந்தைகளின் பொறுப்பில் குழந்தையை விட்டுச் செல்வதாக 11% பெண் கள் கூறினர்.

மூத்த குழந்தைகளின் பராமரிப்பில் குழந்தையை விட்டுப் போகிறவர்களில் 35% பெண்கள் மட்டுமே அவர்களுடைய கவனிப்பு பற்றி திருப்தி தெரிவித்தனர். பெற்றோர்களின் விருப்பத்துக்கும் தேவைக்குமேற்ப மூத்த குழந்தைகளால் குழந்தையைப் பராமரிக்க இயலவில்லை என்பது இதனால் தெரிய வரு கிறது. வேறு வழியின்றியே இம்முறையைத் தாய் மார்கள் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

*சிறு வயதிலேயே சிறுகுழந்தையை பராமரிக்க வேண்டிய பொறுப்பை மூத்த குழந்தைகள் ஏற்பது, அவர்களின் வளர்ச்சியிலும், சிறு குழந்தைகளின் வளர்ச்சியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.*

# குழந்தை பராமரிப்பு சேவைகளும் தேவைகளும்

தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குழந்தை பராமரிப்பு மையங்கள் பரந்து விரிந்து அமைந்திருக்கின்றன. முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இந்நிலையங்கள் பலவிதப் பணிகளை மேற்கொள்கின்றன. ஊட்டச்சத்தும் ஆரம்ப சுகாதாரப் பணியும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு மதிய சத்துணவுத் திட்டத்தை தொடங்கி 13 ஆண்டுகளாக மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது, உலக வங்கி தனது வருடாந்திர அறிக்கையில் இத்திட்டத்தை பெரிதும் பாராட்டியுள்ளது.

எனினும், குழந்தை பராமரிப்பு மையங்களின் பணி மற்றும் செயல்பாடுகள் குறித்து பலவித குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. முக்கியமான குற்றச்சாட்டு, அதன் மோசமான தரமும் நிலவக்கூடிய லஞ்ச ஊழல்களுமே. ருசியற்ற உணவு, போதுமான விளையாட்டு சாதனங்களின்மை, சுத்தம் போதாமை, மோசமாகப் பராமரிக்கப்படும் கட்டிடங்கள், போதுமான கல்வி அறிவு வழங்கப்படாமை, வழிகாட்டுதல்களுடன் அமைந்த பொழுதுபோக்கு அம்சங்களின்மை போன்ற குற்றச்சாட்டுகள் சமூகத்தின் பல தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன. ஆய்வுகளும் இவற்றையே வெளிப்படுத்துகின்றன. அங்கு வேலை செய்பவர்களுக்கு சொற்ப ஊதியமே அளிக்கப்படுவது பற்றிய பராமளிப்பாளர்களின் மனத்தாங்கலும் மற்றுமொரு பிரச்சனை.

ஆனாலும் கூட, தமிழ்நாட்டில் குழந்தை பராமரிப்பு மையங்கள் பரந்துபட்ட அளவில் உள்ளதை இந்த ஆய்வு உறுதி செய்கிறது. 80% பெண்கள் 1கி.மீ. தூரத்துக்குள் குழந்தை பராமரிப்பு மையம் இருப்பதாகவும் அதை சுலபமாக அணுக முடிவதாகவும் சொல்கிறார்கள்.

### விழிப்புணர்ச்சி

I C D S (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்) தவிர்த்த பிற குழந்தை பராமரிப்பு சேவைகள் பற்றி 70%க்கும் மேலான பெண்கள் அறிந்திருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி 90%க்கும் மேலான பெண்கள் அறிந்திருக்கிறார்கள். பல்வேறாகப் பிரிந்திருக்கும் எல்லா குழந்தைநல செயல் திட்டங்களையும் ஒருங்கிணைத்து எல்லாவற்றிலும் ஒரே விதமாகப் சேவை நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் தமிழ் நாடு அரசு முயன்று வருகிறது.

### பராமரிப்பு சேவைகள் பயன்படுத்தப்படும் விதங்கள்

பலவிதமான குழந்தை பராமரிப்பு சேவைகளைப் பற்றி அறிந்திருப்பது அவைகளின் பலனை முறையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு உதவும் என்று சொல்ல முடியாது. 24% பெண்களே அதை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். 35% பெண்கள் அவ்வப்போது அல்லது இடையிடையே இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மீதி உள்ள 41% பெண்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்வதே இல்லை. மற்ற எல்லா சேவைத் திட்டங்களையும் விட மதிய உணவுத் திட்டமும் (44%) தாய் சேய் நலத்திட்டமும் M C H (45%) அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றன.

நகரங்களை விட கிராமப் புறங்களிலேயே குழந்தை பராமரிப்பு சேவைகளை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கிட்டத்தட்ட 50% நகரத்தார் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதே இல்லை.

பெண்களின் மாத வருமானமும், குழந்தை பராமரிப்பு சேவைகளைப் பயன்படுத்தித் கொள்வதில், குறிப்பிடத்தகுந்த பங்கை வகிக்கிறது. கொஞ்சம் கூடுதலான வருமானம் பெறுபவர்கள் குழந்தை பராமரிப்பு சேவைகளைக் குறைவாகவே பயன்படுத்துகிறார்கள். குறைவான வருவாய் பெறுபவர்களில் 42% பெண்கள் இச்சேவைகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களிலும் 11% பெண்களே அதன் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். கூடுதலான வருமானம் பெறும் பெண்களால் பணம் கொடுத்து தனியார் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதே இதற்குக் காரணமாக இருக்கலாம். குடும்பத்தின் மொத்த வருமானத்தில் பெண்களின் பங்கு அதிகரிக்கும் பொழுது, பராமரிப்பு நிலையங்களை உபயோகப் படுத்தும் அளவும் கூடுகிறது. குடும்ப வருமானத்தில் 25%க்கும் குறைவான பங்கை ஏற்பவர்களில் 50%க்கும் மேற்பட்டவர்கள் குழந்தை பராமரிப்பு நிலையங்களை பயன்படுத்துவதில்லை. வறுமையால் வாடும் பெண்களுக்கு இவர்களைப் போல் குழந்தை பராமரிப்புக்கு வேறு நிறைய வழிகள் இல்லாமல் போவதும் தெரியவருகிறது.

உழைக்கும் பெண்களின் வேலை நாட்களின் எண்ணிக்கையும் குழந்தை பராமரிப்பு நிலையங்களைப் பயன்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வேலை நாட்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் குறைவான சதவீதத்தினரே குழந்தை பராமரிப்பு சேவை நிலையங்களைப் பயன்படுத்துகின்றனர். ஏனெனில் இந்த நிலையங்கள் வாரத்தில் ஐந்து நாட்களே திறந்திருக்கின்றன. மற்ற இரு நாட்களில் உணவு மட்டுமே வழங்கப்படுகிறது.

*மையங்களில் ருசியற்ற உணவு, போதுமான விளையாட்டு சாதனங்களின்மை, சுத்தம் போதாமை, மோசமாகப் பராமரிக்கப்படும் கட்டிடங்கள், போது மான கல்வி அறிவு வழங்கப்படாமை போன்ற குற்றச்சாட்டுகள் சமூகத்தின் பல தரப்பினராலும் முன்வைக்கப் படு கின்றன.*

## பயன்படுத்த முடியாமைக்கான காரணங்கள்

குழந்தை பராமரிப்பு மையங்கள் வீட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவுக்குள் இருக்கின்ற போதிலும் 29% பெண்களே குழந்தைகளை அங்கு அனுப்புகிறார்கள். அனுப்பாதவர்களில் குழந்தைகளின் இள வயதை முக்கியமான காரணமாக சொன்னவர்கள் 60%. அரசின் குழந்தை பராமரிப்பு மையங்கள் 2 வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகளையே பராமரிக்க ஆயத்தமான நிலையில் இருப்பதும், இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

சுலபமாக அணுக முடியாத தன்மையும், போதுமான வசதிகளற்ற நிலைமையும், உழைக்கும் மகளிரின் தேவைக்கு பொருந்திவராத பராமரிப்பு நேரமுமே குழந்தை பராமரிப்பு மையத்துக்குக் குழந்தையை அனுப்ப முடியாததற்கான காரணங்களென 20% கூறுகின்றனர்.

குழந்தை பராமரிப்பு மையப் பணியாளர்கள் போதிய பயிற்சியற்றவர்களென்றும் அவர்களிடம் குழந்தையை ஒப்படைக்க முடியாதென்றும் 7% பெண்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மாநிலமெங்குமுள்ள குழந்தை பராமரிப்பு சேவை அமைப்புகளை 59% பெண்கள் முழுமையாகவோ, அவ்வப் பொழுதோ பயன்படுத்துகிறார்கள். பொதுவாக அதன் சேவைகளில் அவர்கள் திருப்தியடைந்தாலும் அவர்களுக்குச் சில விமர்சனங்களும் இருக்கின்றன.

40% பெண்கள் குழந்தை பராமரிப்பு நிலையங்களில் மோசமான தரத்திலேயே குழந்தைகள் வளர்வதாகக் கூறுகின்றனர். ஆனால் 80% பெண்கள் பராமரிப்பு நிலையங்களின் ஒத்துவராத பணி நேரத்தையே பெரும் தடையாக கருதுகின்றனர். பராமரிப்பு நிலையங்களிலுள்ள திட்ட அலுவலர்களின் நட்பற்ற அலட்சிய போக்கை ஒரு சில பெண்கள் குறையாக குறிப்பிட்டனர்.

## குழந்தை பராமரிப்பு மையங்கள் பற்றிய சமூகக் கண்ணோட்டம்

இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கிராம மக்கள் பலரையும் சந்தித்து குழந்தை பராமரிப்பு சேவை அமைப்புகள் பற்றிய அவர்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்தனர். கிராம மக்கள் பிரச்சனையாக முன் வைத்தவை:

- பராமரிப்பு நிலையங்களின் அடிப்படை வசதியின்மையும் சேவையின் தரமும்.
- குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மதிய உணவின் தரம்.
- குழந்தைகளின் பொழுதை பயனுள்ள வகையில் செயல்படுத்தாதது, கல்வி அறிவு அளிக்காதது.
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்தில் (TINP) அளிக்கப்படும் சத்து உருண்டையின் ஒழுங்கற்ற விநியோகம் மற்றும் கெட்டுப்போன தரம்.

குழந்தை பராமரிப்பாளர்களின் வேலைப் பளு பற்றியும் அவர்களுக்கு அளிக்கப்படும் சொற்ப சம்பளம் பற்றியும் தங்களுடைய அக்கறையை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டனர்.

ஏழை மக்களே தங்கள் குழந்தைகளை இம்மையங்களுக்கு அனுப்புவதாகச் சில மாவட்ட கிராமத்தார் தெரிவித்தனர். அரசாங்க குழந்தை பராமரிப்பு மையத்தை விட, தன்னார்வக் குழுக்களாலும் தனியாராலும் நடத்தப்படும் நிலையங்கள் தரத்திலும் செயல்பாட்டிலும் மேம்பட்டு இருப்பதாகக் கருதுகிறார்கள்.

## குழந்தை பராமரிப்பிற்க்கான தேவைகள் பற்றிய கண்ணோட்டம்

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க எவ்வித உதவிகள் தேவைப்படுகின்றன என்று தாய்மார்களிடமே நேரடியாக கேள்வி கேட்கப்பட்டது. அது பற்றி அவர்கள் அதுவரை யோசித்துப் பார்த்திராததால் பலரால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

பண உதவி அளிக்கப்பட வேண்டுமென 72% பெண்கள் தெரிவித்தார்கள். அதன்மூலம் குழந்தையின் ஊட்டம், ஆரோக்கியம், கல்வி போன்ற தேவைகளை இப்போதை விடவும் மேலாகத் தங்களாலேயே வழங்க முடியும் என்று இவர்கள் கருதுகிறார்கள். குறைந்த பட்சமாக பிரசவ காலத்திற்கு முன்னதாக சில மாதங்களுக்கும், பிரசவத்துக்குப் பின்னான 6 மாதங்களுக்கும், மாதமொன்றுக்கு 400 ரூபாய் பண உதவி அளிக்க வேண்டும் என்று ஒரு சிலர் தெரிவித்தனர். இத்தகைய உதவியினால் தாய்ப்பால் கொடுக்கும் காலத்தின் அளவை

நீட்டிப்பதோடு, குழந்தையையும் அருகிலேயே இருந்து நன்கு வளர்க்க முடியும் என்று கருதுவதாக கூறினர்.

தரத்திலும் அமைப்பிலும் சிறந்த குழந்தை பராமரிப்பு நிலையம் தேவை என்று 59% பெண்கள் கருதுகிறார்கள். தாயின் வேலை நேரத்துக்கேற்ற பராமரிப்பு நேரத்தை குழந்தை பராமரிப்பு மையங்கள் கொண்டிருக்க வேண்டும் என்றனர். குழந்தை பராமரிப்பு மையங்கள் காலை 6 அல்லது 7 மணியிலிருந்தாவது ஆரம்பித்து மாலை 6 மணி வரை செயல்பட வேண்டுமென்று குறிப்பிட்டுக் கூறுகிறார்கள். அதேபோல் சுத்தமான உணவும் சுகாதாரமான பாதுகாப்பான சூழல், விளையாட்டுப் பொருட்கள் போன்ற அடிப்படை வசதிகள் நிறைந்ததாகவும், சிறந்த நிர்வாகத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பது 42% பெண்களின் கருத்தாக இருக்கிறது. பராமரிப்பு மையங்களில் குழந்தைக்கு எழுத படிக்க கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சிலர் விருப்பம் தெரிவித்தனர்.

முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம், மூன்றாவது குழந்தை வரை நீட்டிக்கப்பட வேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். வேறு சிலர், மிகவும் ஏழ்மையான குழந்தைகளின் தேவைகளை கூடுதலாக நிறைவேற்ற வேண்டும் என்கிறார்கள். பெண் குழந்தைகளுக்கு கூடுதலான பலன்கள் அளிக்கப்பட வேண்டும் என்று சிலர் தெரிவித்தனர். முத்துலெட்சுமி ரெட்டி திட்டத்தின் கீழ் பெறப்படும் உதவித் தொகையை பெறுவதற்கான வழிமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோள் உறுதியாக முன்வைக்கப்பட்டது. குழந்தை பராமரிப்பு மையங்கள் வேலையிடத்துக்கு அருகிலேயே அமைய வேண்டும் என்கிறார்கள் சிலர். குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்ட இது வகை செய்வதோடு குழந்தைகளுக்கு அருகிலேயே இருந்து பார்த்துக் கொள்ளவும் முடியும் என்கிறார்கள்.

தாய் தொடர்ந்து ஆறு மாத காலம் ஊதியமற்று இருக்க முடியாத சூழலில் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைக்ளையும் குழந்தை பராமரிப்பு நிலையங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டுமென 20% பெண்கள் விரும்புகிறார்கள். குழந்தைக்கு 2 வயது ஆகும்வரை, வேலையையும் குழந்தையையும் சமாளிக்க முடியாது சிரமப்பட வேண்டியிருப்பதால் அதற்கேற்ப குழந்தை பராமரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் அமைய வேண்டுமென மிகவும் தீவிரமாக நினைக்கிறார்கள்.

குழந்தை பராமரிப்பு மையத்தின் இப்போதைய சேவை இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை என்பது தெளிவு. எனவே, அதன் வசதிகள் பெருக வேண்டும். அதற்கேற்ப, கொள்கை ரீதியாகவும் மாறுதல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

*குறைந்த பட்சமாக பிரசவ காலத்திற்கு முன்னதாகச் சில மாதங்களுக்கும், பிரசவத்துக்குப் பின்னால் 6 மாதங்களுக்கும், மாதமொன்றுக்கு 400 ரூபாய் பண உதவி அளிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.*

# ஆய்வு உணர்த்தும் செய்திகள்

ஒருங்கிணைக்கப்படாத தொழிற் பிரிவுகளில் பணிபுரியும் பெண்களின் குழந்தை பராமரிப்பு தேவைகளையும், அதற்கு ஈடு கொடுக்க அவர்கள் பின்பற்றும் வழி முறைகளையும் ஆழமாகவும் விளக்கமாகவும் பதிவு செய்ய இந்த ஆய்வு முற்பட்டது. இதில் தெரிய வந்துள்ள சில உண்மைகள் ஒருங்கிணைக்கப்படாத தொழிற்பிரிவுகளில் பணிபுரியும் 89% பெண்களின் நிலைமைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை கவனத்துக்குக் கொண்டு வருகிறது.

## அடிப்படை கொள்கைகள்

குழந்தை பராமரிப்பு குறித்த சட்ட விதி முறைகளான 15 (3) 39 (f), 45 மற்றம் 47 ஆகியவை செயல்வடிவம் பெற வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை (1974) இவ்வாறு கூறுகிறது. குழந்தைகளுக்கான அடிப்படை சேவைகளை குழந்தை பிறப்பதற்கு முன்னும் பின்னும் வழங்கி குழந்தையின் வளர்ச்சிக் கட்டத்தில் குழந்தை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், சமூக அளவிலும் முழுமையாக வளர்ச்சியடைவதை உறுதி செய்வது அரசின் கொள்கையாக இருக்க வேண்டும். கீழ்க் காணும் செயல் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதையும் இக் கொள்கை குறிப்பிடுகிறது:

- குழந்தையின் உடல் நலப் பாதுகாப்பு குறித்த தற்காப்பு மற்றும் முன்னேற்ற அம்சங்கள்.
- பள்ளி முன்பருவக் குழந்தைக்கும், சிறு குழந்தைக்கும், மகப்பேறுக்கு முன்னும் பின்னும் தாய்க்கு ஊட்டச்சத்துணவு அளிப்பது.
- வேலைக்கும் செல்லும் மற்றும் உடல் நலிவுற்ற தாய்மார்களின் குழந்தைகளுக்கான பராமரிப்பு மையங்கள்.

தேசியக் கல்விக் கொள்கை (1992)யின் செயல் திட்டமானது, ஒருங்கிணைக்கப்படாத தொழிற்பிரிவுகளைச் சார்ந்த நலிவுற்ற சாலைப் பணியாளர்கள், கட்டிடப் பணியாளர்கள், விவசாயக் கூலிகள், நாடோடிகள், மலைவாழ் மக்கள் போன்ற அடித்தட்டு மக்களுடைய குழந்தைகளின் ஆரம்பநிலை பராமரிப்புக்கும் கல்விக்கும் வழி வகுக்கிறது.

எனினும், இந்த ஆய்வின் முடிவுகள், அரசின் நோக்கத்துக்கும், குழந்தை பராமரிப்பு நிலைமையின் நடைமுறை யதார்த்தத்துக்கு மிடையே துல்லியமான இடைவெளி நிலவுவதைத் தெளிவுபடுத்துகின்றன.

## தேவைகளுக்கும் சேவைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி

தமிழ்நாட்டில் குழந்தை பராமரிப்பு சேவை மையங்கள் பரவலாக இருக்கிற போதிலும், ஒருங்கிணைக்கப்படாத தொழிற்பிரிவுகளில் பணிபுரியும் தாய்மார்களின் நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அவை அமைந்திருக்கவில்லை. வெவ்வேறு தொழிற்பிரிவுகளின் தன்மைக்கு ஏற்றாற்போல் உழைக்கும் மகளிரின் குழந்தைப் பராமரிப்பு சேவையின் தேவையும் மாறுபடுகிறது.

குழந்தை பராமரிப்பு மையங்களின் சேவையின் தேவை 10 முதல் 12 மணி நேரமாக இருக்கும் பொழுது அவை 6 மணி நேரமே

*தமிழ்நாட்டில் குழந்தை பராமரிப்பு சேவை மையங் கள் பரவலாக இருக்கிற போதிலும், ஒருங்கிணைக் கப்படாத தொழிற் பிரிவு களில் பணிபுரியும் தாய்மார் களின் நியாயமான தேவை களைப் பூர்த்தி செய்வதாக அவை அமையவில்லை.*

பணி புரிகின்றன. அவற்றின் பணி நேரம் நெகிழ் வாக, லகுவாக மாற்றியமைக்கப்பட்டால் தாய் மார்களின் பலவிதத் தேவைகளில் சிலவாவது பூர்த்தியாகும்.

பெரும்பாலான பராமரிப்பு மையங்கள் 2 அல்லது 3 வயதிற்கும் மேற்பட்ட குழந்தை களையே பராமரிப்பதற்கான வசதிகளை கொண்டிருக்கின்றன. 6 மாதம் நிரம்பிய குழந்தைகளைப் பராமரிப்பதெற்கென்று மாற்று குழந்தை பராமரிப்பு சேவைத்திட்டங்கள் தேவைப்படுகின்றன.

## சேவைகளின் தரம்

மற்றுமொரு பிரச்சனை, தரம் பற்றியது. குழந்தை பராமரிப்பு மையங்களின் போதுமான தரமின்மை இந்த ஆய்வில் உறுதிப்பட்டது. இந்த மையங்களின் தரத்தை உயர்த்த வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அளிக்கப்படும் உணவு, விளையாட்டுப் பொருள் கள், விளையாட்டுக் கூடம், பாதுகாப்பான கட்டிடம், பயன்படுத்தும் பொருள்கள் ஆகிய அனைத்தின் தரமும் உயர வேண்டும். அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு அளிக்கப் படும் பயிற்சி, ஊதியம், பணி நேரம் மற்றும் பணி நிலைமைகளின் தரம் உயர்வதன் மூலமே குழந்தை பராமரிப்பு மையங்களின் தரம் மேம்பட முடியும்.

## முன்பருவக் கல்வி

அடுத்த முக்கியமான பிரச்சனை, குழந் தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பான பருவத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி. குழந்தை பராமரிப்பு மையங் களுக்கு அனுப்புவதன் மூலம் குழந்தைகள் அங்கு ஆரம்பநிலையில் எழுதவும் படிக்கவும் அறிந்து கொள்வார்களென்று தாய்மார்கள் நம்புகிறார்கள். ஆனால் குழந்தை பராமரிப்பு மையங்கள் இந்தத் தேவையை சரிவர நிறை வேற்றாமல் போவதால் தாய்மார்கள் அதிருப்தி அடைகிறார்கள். இந்த பராமரிப்பு மையங்களில் முன்பருவக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட வேண்டிய அதே நேரத்தில், அத்தகைய கல்வி எழுத, படிப்பதற்கானது அல்ல என்பதை தாய்மார்களிடம் விளக்கவும் முயற்சிகள் எடுக் கப்பட வேண்டும்.

## பேறு கால உதவிகளும் திட்டங்களும்

தற்போது நடைமுறையிலிருக்கும் திட்டத் தின் மூலமாக அளிக்கப்படும் உதவித் தொகையை கணிசமாக உயர்த்துவது அவசியம். பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ஏற்படும் வருவாய் இழப்பினால் வரக்கூடிய நெருக்கடி களிலிருந்து விடுபட இது உதவும். இதன் மூலம் வருவாயற்ற நிலையை ஈடு செய்ய முடிவ தோடு, தாய்மார்கள் ஆறு மாத காலத்துக்காவது வீட்டிலிருந்தபடி குழந்தைக்குத் தாய்ப் பாலூட்ட முடியும். குழந்தைகளின் நலன் பொருட்டு, குழந்தை பிறந்த பின் சில காலத்திற்கு, பொருளாதார சிக்கல்களையும் பொருட்படுத்தாது, உழைக்கும் தாய்மார்கள்

பணியிலிருந்து விலகி நிற்கின்றனர் என்பதை ஆய்வு தெள்ளத்தெளிவாக காட்டுகிறது.

எவ்வளவோ சிரமங்களுக்கிடையிலும் குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டுவதற்குத் தாய் மார்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுக் கிறார்கள். பேறுகால மற்றும் குழந்தை பரா மரிப்புத் திட்டங்களில் அவசியமான மாற்றங் களைச் செய்வதன் மூலமே தாய்ப்பாலூட்டு வதில், பணிபுரியும் தாய்மாருக்கும் அதைப் பெறுவதில் குழந்தைகளுக்கும் உள்ள உரிமை யைப் பூரணமாக பாதுகாக்கமுடியும்.

## மூத்த பெண் குழந்தைகளுக்கான நிவாரணம்

மகப்பேறு உதவியும், முறையான குழந்தை பராமரிப்பு சேவைகளும் அளிக்கப்படும் பட்சத் தில், மூத்த குழந்தைகள், குறிப்பாகப் பெண் குழந்தைகள், தங்கள் கல்வியையும், இயல்பான வளர்ச்சியையும் இழந்து குழந்தை பராமரிப்பில் ஈடுபட வேண்டியிருப்பது வெகுவாகக் குறை யும். மூத்த பெண் குழந்தைகளை குழந்தைப் பராமரிப்பிலிருந்து விடுவித்து அவர்கள், கல்வி கற்பதை உறுதி செய்ய வேண்டுமென, குழந்தை களுக்கான தேசிய செயல் திட்டம் (1992) வலியுறுத்துகிறது. பள்ளிக்கு அருகிலேயே பராமரிப்பு சேவை அளிப்பது பெண்களின் கல்விக்கு உறுதுணையாக அமைவதோடு, கல்வியை தொடரவும் வழிவகை செய்யும்.

மாற்று வகையான குழந்தை பராமரிப்பு திட்டங்கள் பற்றியும் ஆராயப்பட வேண்டும். குடும்பம் சார்ந்த, சமூகம் சார்ந்த, பெண்கள் குழுக்கள் சார்ந்த மற்றும் பள்ளி சார்ந்த பகல் நேர பராமரிப்பு மையங்கள் அமைக்க முயற்சி செய்யலாம். மனித ஆதார சக்தி பெரும்பாலும் உபயோகப்படுத்தபடாமல் போகிறது. கிராம அளவில் குழந்தை பராமரிப்பு பிரச்சனைகளை தீர்க்க மேற்குறிப்பிட்டவற்றைத் தன்னார்வக் குழுக்கள் முயன்று பார்க்கலாம்.

## முதலாளிகளின் பங்கேற்பு

ஒருங்கிணைக்கப்படாத துறையின் பல வேறு அதிகார அடுக்குகளில், யார் முதலாளி, யாரிடம் குழந்தைப் பராமரிப்பிற்கான உதவியை கேட்பது என்பதெல்லாம் பெரிய பிரச்சனை தான். இருந்தாலும் செய்யக்கூடிய அளவில், பணியிடத்தில் தாயும் சேயும் மிகவும் இணக்க மாக இருப்பதற்கேற்ற சூழலை அமைத்துத் தர முதலாளிகள் முன்வர வேண்டும். பணியில் அமர்த்தப்பட்டிருக்கிற தாய்மார்களின் தேவை களை அவர்கள் உணர்வு பூர்வமாக அணுக வேண்டும். முதலாளிகள் குழந்தைகள் பரா மரிப்பு சேவைக்கென பண உதவி செய்ய முன்வருவதும் நல்லது.

## கொள்கை ரீதியான மாற்றங்கள்

மேற்குறிப்பிட்டவை அனைத்தும் குழந்தை பராமரிப்பு கொள்கையிலும் தற்போதைய அணுகுமுறைகளிலும் முழு முற்றான மாற்றம் தேவை என்பதையே காட்டுகின்றன. அரசாங்க மும், திட்ட வல்லுனர்களும், முதலாளிகளும், குழந்தை பராமரிப்பு என்பதை பெண்களின் தனிப்பட்ட, அல்லது குடும்பப் பிரச்சனையாகத் தான் தொடர்ந்து பார்க்கிறார்களே தவிர, அதை ஒரு சமூகப் பொறுப்பாகக் காண்பதில்லை.

> *பேறுகால மற்றும் குழந்தை பராமரிப்புத் திட்டங்களில் அவசியமான மாற்றங்களை செய்வதன் மூலமே தாய்ப் பாலூட்டுவதில், பணிபுரியும் தாய்மாருக்கும் அதைப் பெறு வதில் குழந்தைகளுக்கும் உள்ள உரிமையைப் பூரண மாகப் பாதுகாக்க முடியும்.*

மகப்பேறும், குழந்தைப் பராமரிப்பும் தனி நபரின் பொறுப்பு மட்டுமல்ல. தேசத்தின் நீண்ட கால நலன் கருதி அரசும், குடும்பமும், சமூகமும், உழைக்கும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் பராமரிப்பிற்க்கு பொறுப்பேற்க முன்வர வேண்டும். குழந்தைப் பராமரிப்பில் ஆண்களுக்கும் பொறுப்பிருக்கிறது என்பதை உணர்த்தவும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

பொருளாதார, நிர்வாக மறுசீரமைப்பு என்ற பெயரால் பெண்களின் குழந்தைகளின் தேவைகள் பின்னுக்கு தள்ளப்பட்டு, குழந்தைப் பராமரிப்பிற்கான போதுமான நிதிஆதாரங்களை அரசு அளிக்கத் தவறுகிறது. நிதி ஆதாரங்கள் சார்ந்தும், நிர்வாக நடைமுறைகள் சார்ந்தும் கொள்கைகள் வகுக்கப்படாமல், தாய் சேய் நலன் சார்ந்து உருவாக்கப்பட வேண்டும். வறுமை ஒழிப்புக்கு தேசிய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது போல், இதற்கும் அளிக்கப்பட வேண்டும்.

சேவை அடிப்படையில் திட்டங்கள் வகுப்பதை விட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள் அடிப்படையில் திட்டங்கள் மாற்றப் பட வேண்டும்.


## முடிவுரை

குழந்தை நலம் என்பது பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியது. இதற்கு முதலீடு செய்வது பற்றி யாரும் யோசிக்கவே கூடாது. இதனால் விளையக்கூடிய பலன் பெரிது. முதலாளிகளிடமும், திட்ட வல்லுனர்களிடமும், பொது மக்களிடமும், குழந்தை பராமரிப்பு பற்றிய அவர்களுடைய மனோபாவத்தில் அடிப்படை மாற்றம் நிகழ வேண்டும். அதை நோக்கிய முதல்படி என்பது, குழந்தை பெற இருக்கும் பெண் அத்தியாவசியமான சமூகப் பங்களிப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்பதை அங்கீகரிப்பது. இரண்டாவது, குழந்தைகள் தேசத்தின் அளப்பரிய சொத்து என்பதால் அவர்களுக்கு மிகச் சிறந்த பராமரிப்பை வழங்குவது தேசத்தின் பொறுப்பு என்றாக வேண்டும். மூன்றாவது, குழந்தைக்கு உரிய பராமரிப்பு கிடைப்பதென்பது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமை என்ற நிலை அமைய வேண்டும். இதைச் சரியாகப் புரிந்து கொண்டால், தற்பொழுது நடை முறையில் இருக்கக்கூடிய பராமரிப்பு சேவையை, தாய்–சேய் நலத்திற்கு இணக்கமாக மாற்ற முடியும் என்பது உறுதி.

*சேவை அடிப்படையில் திட்டங்கள் வகுப்பதை விட்டு,*
*பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள் அடிப்படையில்*
*திட்டங்கள் மாற்றப் பட வேண்டும்.*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| யார் பொறுப்பு... | 2 |
| குழந்தைப் பராமரிப்பைப் பாதிக்கும் பணி நிலைமைகள் | 5 |
| குழந்தை பராமரிப்புக்கான வழிமுறைகள் | 8 |
| குழந்தை பராமரிப்புக்கான வழிமுறைகளும் நடைமுறைச் சிக்கல்களும் | 10 |
| தாய்ப் பாலூட்டலும் வேலையும் | 13 |
| குழந்தை பராமரிப்பில் ஈடுபடும் மூத்த குழந்தைகள் | 15 |
| குழந்தை பராமரிப்பு சேவைகளும் தேவைகளும் | 17 |
| ஆய்வு உணர்த்தும் செய்திகள் | 21 |


***ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்***

***தரமணி, சென்னை – 600 113***